ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1954/30 - 2016 පෙබරවාරි මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.02.18

*1954/30 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இச் சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கி V இனுடைய சிலாபம் நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் நீர் சேகரிப்புத் தாங்கியை நிர்மாணித்தலின் பொருட்டு காணித்துண்டொன்று தேவைப்பட்டிருப்பதால், இங்கு கீழே உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
“லக்திய மெதுர”,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2016,பெப்புருவரி 15.
5/2/2/1156

**அட்டவணை**

புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 568, முன்னேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவின் லுனுபிட்டியவத்தை எனும் ஊரில் அமைந்துள்ள லுனுபிட்டியவத்தை எனும் காணியில் தோற்றப்படும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. ஜே. பீ. பீ. ஆர். ஜயசுந்தர அவர்களால் ஏற்பாடு செய்துள்ள 2349 ஆம் இலக்க வரைவின் துண்டு இலக்கம் 02 என தோற்றப்படும் சுமார் 0.224 ஹெக்டயார் (02 றூட் 8.5 பேர்ச்சஸ்) மொத்த விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு.

வடக்கு : 2349 ஆம் இலக்க வரைவில் துண்டு இல. 01 இலான காணித்துண்டு மற்றும் காணியின் மீதித் துண்டு;

கிழக்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் காணி ;

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

தெற்கு : கால்வாய் ;

மேற்கு : 410ஏ இலக்க வரைவில் துண்டு எழுத்து B இலான காணித்துண்டு.

உரிமை கோருபவரின் பெயர் மற்றும் முகவரி :

1. திருமதி கனகசபை இராஜமணி,
கணபதி ஹோட்டல்,
முன்னேஸ்வரம்,
சிலாபம்.

2. திரு. சிங்காரவேல் சண்முகம்,
கணபதி ஹோட்டல்,
முன்னேஸ்வரம்,
சிலாபம்.

3 - 105

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.